1973 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முறையாகப் பதில் சொல்வதானல் தனியாகக் கேள்வி போடவேண்டுமென்று தெரிவிக்க முடியும். இருந்தாலும் இந்தக் கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கான கட்டிடம் கட்ட நிலம் பெறவேண்டுமென்று அரசு முயற்சித்தது. ஏறத்தாழ ஏழு லட்சம் ரூபாய் அளவிற்கு விலை கொடுத்து இடம் பெறவேண்டியிருக்கிறது. இடம் வாங்குவதற்கு ஏழு லட்சம் ரூபாய் என்றல், மருத்துவமனைக் கட்டடம் போன்றவற்றிற்கு 10 லட்சம் ரூபாய் தேவையாகும். அந்த அளவில் அந்தத் திட்டம் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இவ்வளவு தெளிவாகப் பதில் சொன்னல் துணைக் கேள்விகள் அதிகமாகும்.

சென்னை பொது மருத்துவமனை.

* 5. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-68-ஆம் ஆண்டில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு (General Hospital) சிகிச்சைக்காக வருகை தந்த வெளி நோயாளிகள் (அவுட் பேஷன்ட்ஸ்) எத்தனை பேர்?

(இ) அங்குள்ள வெளி நோயாளிகள் பிரிவு எத்தனை மணி நேரம் வேலை செய்கிறது?

(உ) எந்த நேரத்தில் எத்தனை மணி முதல் எத்தனை மணி வரை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 8,31,465 பேர்.

(இ) தினசரி 2 மணி நேரம்.

(உ) காலை 7 மணி முதல் 9 மணி வரை.

திரு. என். கிட்டப்பா : இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் நேரம் மிகக் குறைவாக இருக்கிற சூழ்நிலையையொட்டி, அப்படிக் கருதப்படுவதால், அந்த நேரத்தை இன்னும் அதிகப்படுத்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த நேரம் பொது மக்களுக்கு வசதியான நேரம் என்று கருதப்பட்டு வைக்கப்பட்ட நேரம். அந்த இரண்டு மணி நேரத்தில் அங்கு வருகிற

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

அனைவருக்கும் அவர்கள் மருத்துவப் பரிசோதனை பெற்றுக் கொள்வதற்கும் மருந்து பெறுவதற்கான சீட்டுகள் வழங்கப்படு கின்றன. அந்த இரண்டு மணி நேரத்தில் ஏறத்தாழ 4,800 பேர்களில் இருந்து 5,000 பேர்கள் வரை வருகிறார்கள். அப்படி சீட்டுப் பெற்றுக்கொண்ட 4,800, 5,000 பேர்களும் நல்லமுறையில் பரிசோதிக்கப்பட்டு புற நோயாளிகள் என்ற முறையில் மருந்து வழங்கி திருப்பி அனுப்புவதற்கு 9 மணி வரை மட்டும் அல்ல, கிட்டத்தட்ட பகல் 1 மணி வரைகூட ஆகிறது அதுவரையில் அவர்கள் கவனிக்கப்படுகிறார்கள். இன்னும் நேரத்தை அதிகப் படுத்தவேண்டுமென்று சொன்னால், அந்தப் பொது மருத்துவ மனையில் இருக்கிற இடத்தைப் பொறுத்து கவனிக்கப்பட வேண்டும், போக்குவரத்து முதலிய பல்வேறு தொல்லைகள் மிகுந்திருக்கிற ஒரு பகுதி இது என்ற அளவில் இப்படி அதிகப் படுத்துவது நல்லதல்ல என்றும் அரசாங்கம் கருதுகிறது.

DR. H. V. HANDE: Sir, will the Government accept my suggestion? It is better, from the traffic point of view to allow the out-patients departments to work for 24 hours under a shift system so that the load on the hospital would also be less?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, the policy of the Government is to have out-patients examined at a particular time as far as possible. For emergency cases, all the 24 hours the hospital is providing a section.

திரு. இராம. அரங்கண்ணல்: மாநகராண்மைக் கழகத்திற்குச் சொந்தமாக பல்வேறு பகுதிகளில் ஏராளமான மருத்துவ விடுதிகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் அரசாங்கமே ஏற்று, அந்த மருத்துவ விடுதிகளை அரசாங்கமே ஏற்று நடத்துமானால் அவுட் பேஷன்ட்ஸ் சிரமம் குறையும் அல்லவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாநகராட்சி மன்றம் அதை ஒத்துக்கொண்டு அரசாங்கத்தினிடத்தில் வழங்குவதற்குச் சம்மதிக்குமானால் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முயற்சிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு இப்போது தினசரி 4,800-ல் இருந்து 5,000 பேர்கள் வரை அவுட் பேஷன்ட்ஸ் வருகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போதே அந்தப் பிரிவிற்குச் செல்கிற மருத்துவர்கள் இவ்வளவு அவுட் பேஷன்ட்களையும் சரிவரப் பார்த்து அவர்களுக்கு சரிவர சிகிச்சை

1973 பிப்ரவரி 5]

கொடுப்பதற்கு இயலாமல் இருக்கிற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரிவுக்கு அதிகப்படியான மருத்துவர்களை நியமிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போது வேலை செய்கிற டாக்டர்களைக்கூட எனக்குத் தெரியும். எனவே டாக்டர்கள் காண வில்லை என்ற குறைபாடு இல்லை. இடவசதி பெருக்கப்படவேண்டு மென்ற எண்ணம் இருக்கிறது. எந்த அளவிற்கு இடவசதியைப் பெருக்கமுடியும் என்பது மருத்துவமனை இருக்கிற இடத்தைப் பொறுத்தது.

பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்கள்.

***6. வினு—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நடப்பாண்டில் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிகளை அரசு ஏற்க திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இம் மாவட்டத்தில் ஆறு பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்களை அரசு ஏற்கனவே ஏற்றுள்ளது கடந்த ஆண்டில். இந்த ஆண்டில் அவை செயல் முறைக்கு வரும்.

திரு. எஸ். கணேசன் : ஒன்றியங்களுக்குச் சொந்தமான மருத்துவமனைகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதில் ஏதாவது விதிமுறைகள் அனுசரிக்கப்படுகிறதா? எல்லா ஒன்றிய மருத்துவ மனைகளையும் வருகிற ஆண்டில் அரசே ஏற்றுக்கொள்வதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒன்றிய மருத்துவமனைகள் என்றிருந்த காரணத்திஞலும், எடுத்துக்கொள்ளப்பட்ட மருத்துவ மனைகள் தற்போது ஒன்றியங்களினல் நடத்தப்பட்ட காரணத் திஞலும், அவ்வாறு விடையளிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் இவை எல்லாம் மாவட்ட ஆட்சி மன்றங்கள் இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட மருத்துவமனைகளாகும். அப்போது தொடங்கப் பட்டவை ஏறத்தாழ 225 உள்ளன. அவற்றை ஆண்டுக்கு 40 வீதம் எடுக்க முயற்சிக்கவேண்டுமென்று கடந்த ஆண்டு கருதப்பட்டது. அந்த அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்கு